**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு - 2010**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு மற்றும் காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், நான் அபிப்ராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (இ.க.நி)

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 03 இன் பிரகாரம் பணிப்பாளர் சபை நிதிக்கூற்றுக்களில் கைச்சாத்திடுதல் மாத்திரம் போதுமானது அல்ல அத்துடன் நிதிக்கூற்றுக்களினைத் தயாரித்து சமர்ப்பித்தலிற்ாகன பொறுப்பினை ஏற்றுக்கொண்டமைக்கான வெளிப்படுத்துகை நிதிக்கூற்றுக்களில் உள்ளடங் கியிருக்கவில்லை.

(ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 03 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களின் தனியானதோர் கூறாக உரிமைத்துவ மாற்றங்கள் கூற்றொன்று சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 21,533,040 ஆன பணிக்கொடைக்கான ஏற்பாடு மற்றும் அதன் மீது மேற்கொள்ளப்பட்ட ரூபா 19,296,380 ஆன முதலீடுகள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 16 இற்கு இணங்க ஓய்வூதிய நலத் திட்டங்கள் மற்றும் பணிக்கொடைப் பொறுப்புக் கிரயம் தொடர்பில் வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஆணைக்குழுவினால் வருமான வரி செலுத்துதல் தாமதிக்கப்பட்டமை காரணமாக 2006/2007 மற்றும் 2007/2008 மதிப்பீட்டு ஆண்டுகளிற்காக செலுத்த வேண்டியிருந்த தண்டப்பணங்களை மீளாய்வாண்டில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் கைவிடப்பட்டிருந்தமை தொடர்பில் இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 24 இன் தேவைப்பாட்டிற்கமைய வெளிப்படுத்தல் செய்யப்பட்டிருக்கவில்லை. 2010 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தல் செய்வதாக 2010 மே 20 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பணிப்பாளர் நாயகத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(உ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீள்மதிப்பீட்டுப் பெறுமதியில் காட்டப்படுகையில் இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 18 இன் பிரகாரம் மீள்மதிப்பீடு அமுல்ப்படுத்தப்படும் திகதி, சுயாதீன மதிப்பாட்டாளர் ஒருவர் ஈடுபடுத்தப்பட்டாரா, உருப்படிகளின் நியாயமான பெறுமதிகளை மதிப்பிடுகையில் பின்பற்றிய முறைகள் மற்றும் முக்கிய எடுகோள்கள் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்த வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் ஆணைக்குழுவினால் 28 மோட்டார் வாகனங்கள் ரூபா 53,580,000 பெறுமதிக்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தமை தொடர்பில் அவ்வாறான வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 1.2.2 பெறவேண்டிய கணக்குகள்

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஆணைக்குழுவிற்குச் சொந்தமான நடைமுறைச் சொத்துக்களில் 90% பெறுமதியானவை கடன்பட்டோரைப் பிரதிநிதித்துவம் செய்திருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் மொத்தக் கடன்பட்டோரின் பெறுமதி ரூபா 3,154,106,357 ஆக காணப்பட்டது. கடன்பட்டோர் மீதி வருடந்தோறும் தொடர்ச்சியாக அதிகரித்துச் சென்றிருந்ததுடன் ரூபா 254,714,539 கடன் மீதிகள் 02 தொடக்கம் 19 ஆண்டுகள் வரையிலான வீச்சில் காணப்பட்டன. நீண்ட

காலமாக நிலவிவரும் கடன் மீதிகளை அறவிடுதல் தொடர்பில் பயனுள்ள நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பதிவேடுகளின் படி ஒளிபரப்புக் கூட்டுத்தாபன கட்டணங்கள் தொடர்பிலான பூச்சிய மீதிகளுடன் கூடிய வியாபாரக் கடன்பட்டோர் அடங்கலாக 2204 நபர்கள் காணப்பட்டதுடன் அதில் 866 கடன்கட்டோர்கள் தொடர்பில் ரூபா 2,159,744,355 தொகையொன்று பெறவேண்டிய மீதியாக காட்டப்பட்டிருந்தது. அக் கடன்பட்டோர் மத்தியில் மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக ஆணைக்குழுவினால் 298 நபர்களிற்கு கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன் அதில் 43 கடன்பட்டோர்களினால் மாத்திரம் மீதிகள் உறுதிசெய்யப்பட்டிருந்தன. அக் கடன் மீதிகளை அறவிடுதல் தொடர்பில் மீளாய்வாண்டில் பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்கி ஒழுகாமைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (8) ஆம் பிரிவு | 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையினை பணிப்பாளர் சபை பரிசோதித்து சமர்ப்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 03 மாதத்திற்குள் அதில் அடங்கியுள்ள விடயங்கள் தொடர்பில் சபையினால் முன்னெடுப்பதற்கு உத்தேசித்துள்ள நடவடிக்கைகள் எவை என்பது தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்க வேண்டிய போதிலும் 2009 இன் அறிக்கை தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனித் துணைச்சாதனங்கள் மற்றும் மென்பொருட்கள் சம்பந்தமாக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணிவரப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | நிதிப்பிரமாணங்கள் | |
| | I. நி.பி. 371 (அ) | விதிக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய ரூபா 20,000 இனை மீறி வழங்கப்பட்டிருந்த 82 உப கட்டுநிதிகளின் மொத்தம் ரூபா 5,604,529 ஆகும். |
| | II. நி.பி. 371 (இ) | பணி நிறைவேற்றப்பட்ட உடன் உப கட்டுநிதிகள் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 2,484,209 கூட்டுமொத்தத் தொகை 01 தொடக்கம் 03 மாதங்களிற்கும் மேலான காலமாக தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | III. நி.பி. 110 | இழப்புக்கள் மற்றும் சேதங்கள் தொடர்பில் பதிவேடொன்று பேணிவரப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

## 2.1 நிதி மீளாய்வு

### 2.1.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டில் ஆணைக்குழுச் செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 5,577,306,273 மிகையொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 5,633,977,707 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 56,671,434 குறைவொன்று காட்டப்பட்டது. ஐயக் கடனிற்கான ஏற்பாடு முன்னைய ஆண்டினைக் காட்டிலும் ரூபா 137.097 மில்லியனால் அதிகரித்திருந்தமையே இதற்குப் பிரதான காரணமாக அமைந்திருந்தது.

## 2.1.2 நிதி முகாமைத்துவம்

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஆணைக்குழு ஆண்டுமுழுவதும் தொடர்ச்சியாக அதிகூடிய மிகைப் பணத்தினை கைவசம் வைத்திருந்தது. குறைந்தபட்சம் ரூபா 216 மில்லியனிற்கும் உயர்ந்தபட்சம் ரூபா 2,491 மில்லியனிற்கும் இடைப்பட்ட பணம் எப்போதும் வங்கி நடைமுறைக் கணக்கில் வைத்திருக்கப்பட்டிருந்தது. தேசிய பொருளாதாரத்திற்கு மிகவும் பயனுள்ள விளைவைப் பெற்றுத்தரும் வகையில் இக் குறைப்பயன்பாட்டுப் பணத்தினை முதலீடு செய்தலின் பால் கவனம் ஈர்க்கப்படுகிறது.

(ஆ) 2003 ஆம் ஆண்டில் சேமிப்பு வங்கிக் கணக்கொன்றில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ஐ.அ.டொலர் 420,000 தொகையொன்று மீளாய்வாண்டின் இறுதியளவில் ஐ.அ.டொலர் 497,186 ஆகிய ரூபா 54,881,244 வரை அதிகரித்திருந்த போதிலும் அப்பணத்தினை கடந்த 7 ½ வருடங்களாக பயன்பாட்டிற்கு எடுத்திருக்கவில்லை. இதன் காரணமாக 2010 ஆம் ஆண்டில் ரூபா 1,643,315 அந்நியச் செலாவணி நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(இ) 2005 மார்ச் 31 ஆந் திகதிய 1386/24 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் ஒவ்வொரு செயற்பாட்டாளர்களிடமிருந்தும் அறவிடப்படுகின்ற தொலைத்தொடர்பு அபிவிருத்தி வரியிலிருந்து 2/3 பங்கு ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுகின்ற விதத்தில் தொலைத்தொடர்பு வலைப்பின்னல் வசதிகளற்ற பிரதேசங்களிற்கு அல்லது அவ் வசதிகள் திருப்திகரமாக காணப்படாத பிரதேசங்களில் தொலைத்தொடர்பு வலைப்பின்னலை அபிவிருத்தி செய்வதற்காக மீள வழங்கப்படக் கூடியதாக இருந்தது. இருந்த போதிலும், இலங்கை ரெலிகொம் நிறுவனம் தொலைத்தொடர்பு வலைப்பின்னலை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டங்களில் ஈடுபடுகின்றது என்பதனை உறுதிப்படுத்தாது வழமைப்படி வரியில் 2/3 பங்கினை பிடித்து வைத்துக்கொண்டு 1/3 பங்கினை மாத்திரம் வரியாக செலுத்தியிருந்தது. இதன் படி 2003 மார்ச் 03 தொடக்கம் 2010 திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதிக்கு அக் கம்பனியினால் குறைவாக செலுத்தியிருந்த வரித் தொகை ரூபா 6,671,610,884 ஆனதுடன் அத் தொகையினை அறவீடு செய்வதற்காக ஆணைக் குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

### 2.2.1 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

-----------------------------------------------------------

(அ) 1996 இன் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் 22 (ஊ) பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு தொலைத்தொடர்பு வழங்குனராலும் அவர்களிற்கு விசேடமாக வருடமொன்றிற்கு விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்திற்கான செஸ் கட்டணம் மற்றும் இயக்குனர் அனுமதிப்பத்திரக் கட்டணங்களை எதிர் வரும் ஆண்டின் ஜனவரி 31 இற்கு முன்னர் செலுத்த வேண்டியிருந்த போதிலும் 06 நிறுவனங்களினால் செலுத்த வேண்டிய தமக்குரிய செஸ் கட்டணங்களாகிய ரூபா 190,801,708 கூட்டுத் தொகை 01 தொடக்கம் 09 மாதங்கள் வரையிலான கால வீச்சிலும் 04 நிறுவனங்களினால் செலுத்தவேண்டிய தமக்குரிய இயக்கனர் கட்டணங்களாகிய ரூபா 236,776,650 தொகை 03 தொடக்கம் 09 மாதங்கள் வரையிலான கால வீச்சிலும் தாமதம் செய்து செலுத்தப்பட்டிருந்தன. மேற்படி தாமதச் செலுத்துகைகளின் மீது மேலதிகக் கட்டணமொன்றை அறவிட முடியுமென இயக்கனர்களிற்கு வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு கட்டணமொன்றைத் தீர்மானித்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் இயக்குனர் அனுமதிப்பத்திம் மற்றும் செஸ் கட்டணத்தினை தாமதித்து செலுத்துதல் மற்றும் செலுத்தாதிருத்தல் மீது மேலதிக தண்டப்பணத் தொகையொன்றை அறவீடு செய்வதற்குரிய சட்டரீதியான அதிகாரம் தற்போதுள்ள அதிகாரச்சட்டத்தில் காணப்படாதிருப்பதுடன் அவ்வாறான சட்டரீதியான அதிகாரத்தினைப் பெற்றுக்கொள்ளும் வழிவகைகளை எதிர்வரும் காலத்தில் தொலைத்தொடர்புகள் திருத்திய அதிகாரச்சட்டத்தில் உள்ளடக்கவதற்கு நடவடிக்கை எடுப்பதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தினால் 2011 ஜுன் 28 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்ட 14(2)(சீ) வரைபு அறிக்கைக்கான பதிலின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஏதேனுமோர் தொலைத்தொடர்பு உபகரணமொன்றை வர்த்தக நோக்கில் உற்பத்தி செய்தல், இறக்குமதி செய்தல், விற்பனை செய்தல், விற்பனைக்காக முன்னிருத்துதல், ஒப்படைத்தல், வாடகைக்கு விடுதல், குத்தகைக்கு வழங்குதல், செய்து காட்டல், பேணிவருதல் அல்லது திருத்தம் செய்தல் யாரேனுமொருவரால் மேற்கொள்ளப்படின் அதற்காக 1996 இன் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1991

இன் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் அதிகாரச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின் படி ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்படுகின்ற அனுமதிப்பத்திரமொன்றை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் அவ்வாறு அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ளாது நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் வணிகச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றமை அவதானிக்கப்பட்டது. கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனைகளின் படி அவ்வாறான 37 நிறுவனங்கள் அனுமதிப்பத்திரமின்றி செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டது. இவ்வாறு அனுமதிப்பத்திரமின்றி வணிகக் கருமங்களில் ஈடுபட்டு வருகின்ற நிறுவனங்கள் எவையெனத் தேடியறிந்து கட்டணங்களை அறவிடுவதற்கான வழிமுறைகள் ஆணைக்குழுவினால் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) ஆணைக்குழுவிற்குச் சொந்தமான ரூபா 7,304,348 கொள்விலைப் பெறுமதிகொண்ட மிட்சுபிசி வகையைச் சார்ந்த ஜீப் வாகனம் தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சிற்கு 2005 ஆம் ஆண்டில் விடுவிக்கப்பட்டிருந்தது. 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் நல்லாட்சிக்கான வழிகாட்டல் கையேட்டுச் சுற்றிக்கையின் 8.3.9 ஆம் பிரிவிற்கு முரணாக விடுவிக்கப்பட்டுள்ள இவ் வாகனத்தினை மீண்டும் ஆணைக்குழுவினால் பெற்றுக் கொள்வதற்கு இதுவரை முடியாது போயிருந்தது.

### 2.2.2 கூட்டுத் திட்டமொன்றைச் சமர்ப்பித்தலும் செயன்நடவடிக்கைத் திட்டமும்

---

(அ) அரசாங்க முயற்சிகள் திணைக்களத்தின் 2007 திசெம்பர் 18 ஆந் திகதிய பீ.ஈ.டீ 47 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் அரசாங்க முயற்சிகள் திணைக்களத்தின் நல்லாட்சி வழிகாட்டல்கள் கையேட்டின் 05 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் விபரமாக தயாரிக்கப்பட்ட கூட்டுத் திட்டமொன்றின் பிரதி வருடம் தொடங்கி 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதி, அரசாங்க முயற்சிகள் பாராளுமன்றக் குழுவின் செயலாளர் மற்றும் அரசாங்க முயற்சிகள் திணைக்களத்தின் செயலாளர் என்போரிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. மேலும் தற்போது ஆணைக்குழு வசமுள்ள கூட்டுத்திட்டத்திற்கமைய முகாமைத்துவத்தின் பொறுப்புக்களை தெளிவாக இனங்காணத்தக்க வகையில் ஆணைக்குழுவின் முக்கிய பிரிவுகளான மனித வளங்கள், நிர்வாகம், நிதி, வழங்கல் போன்ற பிரிவுகளை

இனங்கண்டு கூட்டுத் திட்டமொன்றைத் தயாரிப்பதன் பால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திட்டமிட்ட காலப்பகுதியில் நிறைவேற்றப்பட வேண்டிய இலக்குகளைக் காட்டக்கூடிய வகையில் செயல் நடவடிக்கைத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் நிலவும் கூட்டுத் திட்டம் நாளதுவரையானதாக திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக மீளாய்வாண்டில் அடைந்து கொள்வதற்கு எதிர்பார்த்திருந்த குறிக்கோள்களும் இலக்குகளும் எவையெனவும் அவற்றின் நிதி மற்றும் பௌதீக செயன்முன்னேற்றம் எந்தளவு தூரம் அடைந்து கொள்ளப்பட்டது என்பது குறித்தும் மதிப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

-------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பெற்றுக்கொள்ளாத விடுமுறைகளிற்கான படிகள் மற்றும் வீடமைப்புக் கடன் வட்டியில் 2/3 இனை மீளளிப்புச் செய்தல் போன்ற படிகளிற்காக முறையே ரூபா 3,395,212 மற்றும் ரூபா 3,669,585 திறைசேரியின் அங்கீகாரமின்றி மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) தேசிய சம்பளங்கள் மற்றும் ஊழியர் கோப்பு ஆணைக்குழுவின் 2007 ஜுன் 13 ஆந் திகதிய என்எஸ்சீசீ/3/ஏபீசீ/24 ஆம் இலக்க கடிதத்தில் தெளிவாக காண்பிக்கப்பட்டுள்ளதன் படி தொடர்புடைய நிறுவனங்களினால் தனது ஊழியர்களிற்காக வீட்டு வாடகையில் 10% இனை செலுத்துதல் கூடாது. இருந்த போதிலும் அவ் ஏற்பாட்டிற்கு முரணாக ஆணைக்குழுவினால் தனது ஊழியர்களிற்கான வீட்டு வாடகையாக ரூபா 5,290,865 செலுத்தப்பட்டிருந்தது.

### 2.2.4 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

---

ரூபா 30,484,695 கிரயம் கொண்ட முழுமையா பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட கணனிகள் மற்றும் தொழில்நுட்ப உபகரணங்கள் பாவனைக்கு எடுக்கப்படாது காணப்பட்டதுடன் அவற்றைப் பரிசோதித்து மீளவும் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது விற்றுத்தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை பாதிடப்பட்ட தொகைகளுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவு முரண்கள் காணப்பட்டதுடன் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அது தொடர்பான உதாரணங்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

| விடயம் | பாதிடப்பட்ட தொகை | உள்ளபடியான தொகை | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| நிலைய, நிர்வாக செலவினம் | 141,532,930 | 287,338,563 | (145,805,633) |
| ஐயக் கடனுக்கான ஏற்பாடு | 104,500 | 158,553,234 | (153,613,234) |
| திரட்டிய நிதியத்திற்கான செலுத்துகை | 3,200,000,000 | 3,800,000,000 | (600,000,000) |
| முதலீடுகள் | 21,104,615,099 | 7,749,665,953 | (13,354,949,146) |
| செலுத்தப்பட வேண்டிய தொலைத் தொடர்பு அபிவிருத்திக் கட்டணங்கள் | - | 118,458,551 | (118,458,551) |
| செலுத்த வேண்டிய சர்வதேச தொலைத் தொடர்பு இயக்குனர் கட்டணம் | 20,742,422,424 | - | 20,742,422,424 |

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

**-------------------------------------------------------**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது ஆணைக்குழுவின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) பாதீடு

(ஆ) கூட்டுத் திட்டம்

(இ) செயன்நடவடிக்கைத் திட்டம்

(ஈ) மிகை நிதிகளை முதலீடு செய்தல்

(உ) கடன்பட்டோர்